4800

மருத்துவக்கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை –10 அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை: மரு.இரா.சாந்திமலர், எம்.டி., டி.ஏ.,

ந.க.எண்:16044/நி2/4/2021 நாள்: 21.03.2023

பொருள் : நிருவாகம் – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.கு.கார்த்திக் த/பெ.(லேட்) திரு.ந.குணசேகரன், இளநிலை உதவியாளர், தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி, தஞ்சாவூர் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் – பணிவரன்முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

30 MAR 2023

E3

பார்வை :
1. அரசாணை (நிலை)எண்:560, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:03.08.1977 மற்றும் அதன் தொடர்புடைய அரசாணைகள்.
2. அரசாணை (நிலை)எண்:120, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:26.06.1995.
3. அரசாணை (நிலை)எண்:42, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:12.03.2007.
4. அரசாணை (நிலை)எண்:202, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:08.10.2007.
5. அரசாணை (நிலை)எண்:18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:23.01.2020.
6. அரசாணை (நிலை)எண்:48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:26.02.2020.
7. அரசு கடித எண்:8775/ஏடி2/2020–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2)துறை, நாள்:16.03.2020.
8. இவ்வியக்கக பணியமர்த்தல் ஆணை ந.க.எண்:79909/நி2/4/2018, நாள்:06.06.2019.
9. முதல்வர், தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி, தஞ்சாவூர் அவர்களின் பணி நியமன ஆணை ந.க.எண்:5837/நி3/2008, நாள்:11.10.2019.
10. முதல்வர், தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி, தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க.எண்:5837/நி3/2008, நாள்:23.02.2021, 03.04.2021 மற்றும் 09.01.2023.

*****

ஆணை:

தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரியில் ஓவியர் / நிழற்பட கலைஞராகப் (Artist cum Photographer) பணிபுரிந்து கொண்டிருந்த திரு.ந.குணசேகரன் அவர்கள் 23.05.2008 அன்று பணியிடை இறந்துள்ளார். அவரின் பிறந்த தேதி 30.03.1953 ஆகும்.

அவரின் உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.03.2011 ஆகும். அவர் தாம் வகித்து வந்த ஓவியர் / நிழற்பட கலைஞர் பணியிடத்தில் தகுதிகாண் பருவம் முடித்தவர் ஆவார். மேற்படி அரசு ஊழியர் இறந்ததைத் தொடர்ந்து, அவரின் மனைவி திருமதி.கு.கலா என்பவர் தனது 04.09.2008 மற்றும் 13.05.2011 நாளிட்ட கடிதங்களில் தனது மகனும், இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரருமான திரு.கு.கார்த்திக் அவர்களுக்கு கருணை அடிப்படையில் பணி கோரி விண்ணப்பித்துள்ளார். தனியரும் தனது 27.06.2011 நாளிட்ட கடிதத்தில் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்தார்.

2) மனுதாரர் திரு.கு.கார்த்திக் அவர்களின் பிறந்த தேதி 23.04.1994 ஆகும். தனியர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்திருந்தால், பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016)-ன்படி, தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக ரூ.19500 - 71900 - நிலை-8 (Level-8) என்ற சம்பள முறையில் பணிநியமனம் செய்யப்பட்டு, தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரியில் 11.10.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

3) எனவே, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.கு.கார்த்திக் என்பவரின் தற்காலிக பணியினை, பார்வை 6 மற்றும் 7-ல் காணும் அரசாணைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 11.10.2019 முற்பகல் முதல், அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து செயல்முறை ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுவதன் மூலம் தனியருக்கு முதலாண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

இரா.சாந்திமலர்
மருத்துவக் கல்வி இயக்குநர்

பெறுநர்

1. திரு.கு.கார்த்திக்,
இளநிலை உதவியாளர்,
தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி, தஞ்சாவூர்.
- உரிய வழியாக.

2. முதல்வர், தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி, தஞ்சாவூர்.

3. மாநில கணக்காயர், சென்னை -600 018.
4. மாவட்ட கருவூல அலுவலர், தஞ்சாவூர்.

நகல்:

இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை, சென்னை-06.

உதிரி / இருப்பு கோப்பு.

**//உண்மை நகல் / அனுப்பபடுகிறது//**

21/3/2023

நிர்வாக அலுவலர்

21/3/23